

உச்சநீதிமன்ற நீதிபதியாக பொறுப்பேற்க உள்ள சென்னை உயர்நீதிமன்ற (பொ) தலைமை நீதிபதி மகாதேவனை சட்டத்துறை அமைச்சர் எஸ்.ரகுபதி மற்றும் தமிழ்நாடு அரசின் கூடுதல் தலைமை வழக்கறிஞர் ஜெ.ரவீந்திரன் ஆகியோர் சந்தித்து வாழ்த்துத் தெரிவித்தனர்.

### முத்தமிழ் முருகன் மாநாட்டில் பங்கேற்போர்

# பதிவு செய்ய கால அவகாசம் நீட்டிப்பு!

### அமைச்சர் பி.கே.சேகர்பாபு தகவல்!

சென்னை, ஜூலை 18 - அனைத்துலக முத்தமிழ் முருகன் மாநாடு 2024-ல் பங்கேற்க விரும்புவோர் பதிவு செய்வதற்கான கால அவகாசம் ஆகஸ்ட் 15 வரை நீட்டிக்கப்பட்டுள்ளது என இந்து சமய அறநிலையத்துறை அமைச்சர் பி.கே.சேகர்பாபு தெரிவித்துள்ளார்.

பழனியில் ஆகஸ்ட் 24 மற்றும் 25 ஆகிய நாட்களில் நடைபெறவுள்ள அனைத்துலக முத்தமிழ் முருகன் மாநாட்டில் பங்கேற்க விரும்புவோர் பதிவு செய்வதற்கான கால அவகாசம் 2024 ஆகஸ்ட் 15 வரை நீட்டிக்கப்பட்டுள்ளது என இந்து சமய அறநிலையத்துறை அமைச்சர் பி.கே.சேகர்பாபு தெரிவித்துள்ளார்.

திண்டுக்கல் மாவட்டம், பழனியில் 2024 ஆகஸ்ட் மாதம் 24 மற்றும் 25 ஆகிய நாட்களில் அனைத்துலக முத்தமிழ் முருகன் மாநாடு நடைபெற உள்ளது. இம்மாநாட்டில் பங்கேற்கவும், ஆய்வுக் கட்டுரைகளை சமர்ப்பிக்கவும் https://muthamizh murugan maanadu 2024.com/ என்ற தனி இணையதளம் தொடங்கப்பட்டு, மாநாட்டில் பங்கேற்க விரும்பும் முருக பக்தர்கள் 15.07.2024 ஆம் தேதிக்குள்ளும், ஆய்வுக் கட்டுரைகளை சமர்ப்பிக்க விரும்பும் பேராளர்கள் / ஆய்வு மாணவர்கள் 10.07.2024 ஆம் தேதிக்குள்ளும் சமர்ப்பிக்க வேண்டுமென தெரிவிக்கப்பட்டிருந்தது. இந்தியா மற்றும் வெளிநாடுகளிலிருந்து 1,003 ஆய்வுக் கட்டுரைகள் பெறப்பட்டு, அவற்றை பரிசீலிக்கும் பணிகள் தற்போது நடைபெற்று வருகின்றன.

இந்நிலையில் மாநாட்டில் பங்கேற்பதற்கு பதிவு செய்வதற்கான கால அவகாசத்தை நீட்டித்து வழங்கிட வேண்டுமென பல்வேறு தரப்பினரிடமிருந்து வரப்பெற்ற கோரிக்கைகளின் அடிப்படையில் அனைத்துலக முத்தமிழ் முருகன் மாநாட்டின் ஒருங்கிணைப்புக் குழு முடிவுகளின்படி பங்கேற்பாளர்கள் பதிவு செய்வதற்கான கால அவகாசம் 2024 ஆகஸ்ட் 15ஆம் தேதி வரை நீட்டிக்கப்பட்டுள்ளது. ஆகவே, மாநாட்டில் பங்கேற்க விரும்பும் முருக பக்தர்கள் மற்றும் இறையன்பர்கள் இந்த வாய்ப்பினை பயன்படுத்தி பதிவு செய்து கொள்ளலாம் என இந்து சமய அறநிலையத்துறை அமைச்சர் பி.கே.சேகர்பாபு தெரிவித்துள்ளார்.

### உள்துறைச் செயலர் உள்பட

# 15 ஐ.ஏ.எஸ். அதிகாரிகள் பணியிட மாற்றம்!

சென்னை, ஜூலை 18 - தமிழ்நாடு உள்துறைச் செயலர் உள்பட 15 ஐ.ஏ.எஸ். அதிகாரிகள் பணியிட மாற்றம் செய்யப்பட்டுள்ளனர். அரசு தரப்பில் வெளியிடப்பட்டுள்ள செய்திக்குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது,

உள்துறைச் செயலர் அமுதா அமுதா வருவாய்த்துறை மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறை முதன்மைச் செயலராக நியமிக்கப்பட்டுள்ளார். உள்துறைச் செயலராக தீரஜ் குமார் ஐ.ஏ.எஸ். நியமிக்கப்பட்டுள்ளார்.

வருவாய்த்துறை மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறை முதன்மைச் செயலராக பொறுப்புவகித்த வி. ராஜாராமன் ஐ.ஏ.எஸ். தமிழ் வளர்ச்சி மற்றும் தகவல் துறை செயலராக நியமிக்கப்பட்டுள்ளார்.

சென்னை மாநகராட்சி ஆணையராக இருந்த டாக்டர் ஜெ. ராதாகிருஷ்ணன் மாற்றப்பட்டு, பள்ளிக்கல்வித் துறை செயலராக இருந்த ஜெ. குமரகுருபரன் சென்னை பெருநகர மாநகராட்சி ஆணையராகவும்,

கூட்டுறவுத்துறை சங்கங்களின் கூடுதல் பதிவாளராக பொறுப்புவகித்த டாக்டர் ஜெ. விஜயா ராணி இணை ஆணையராகவும் நியமிக்கப்பட்டுள்ளனர்.

டாக்டர் ஜெ. ராதாகிருஷ்ணன் உணவு, நுகர்வோர் பாதுகாப்பு மற்றும் கூட்டுறவுத்துறை கூடுதல் முதன்மைச் செயலராக நியமிக்கப்பட்டுள்ளார்.

சிட்கோ மேலாண் இயக்குநராக செயல்பட்ட எஸ். மதுமதி ஐ. ஏ. எஸ். பள்ளிக்கல்வித்துறை செயலராக நியமிக்கப்பட்டுள்ளார்.

உணவு, நுகர்வோர் பாதுகாப்பு மற்றும் கூட்டுறவுத்துறை கூடுதல் முதன்மைச் செயலராக பொறுப்புவகித்த டாக்டர் கே. கோபால் ஐ. ஏ. எஸ். கால்நடை, மீன்வளம் மற்றும் பால்வளத்துறை கூடுதல் முதன்மைச் செயலராக நியமிக்கப்பட்டுள்ளார்.

ஈரோடு மாநகராட்சி ஆணையராக டாக்டர் நார்ணவாரே மணீஷ் சங்கர் ராவ் நியமிக்கப்பட்டுள்ளார்.

சேலம் மாநகராட்சி ஆணையர் எஸ். பாலசந்தர் தாம்பரம் மாநகராட்சி ஆணையராக நியமிக்கப்பட்டுள்ளார்.

பொது விநியோகம் மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத்துறை முதன்மைச் செயலராக (ஆணையர்) பொறுப்புவகித்த ஹர் சஹாய் மீனா ஐ.ஏ.எஸ். சிறப்பு புத்தாக்கத்துறை முதன்மைச் செயலராக நியமிக்கப்பட்டுள்ளார்.

தொழிலாளர் நலத்துறை மற்றும் திறன் மேம்பாட்டுத்துறை செயலராக கே. வீர ராகவ ராவ் நியமிக்கப்பட்டுள்ளார்.

தகவல் தொழில்நுட்பம் மற்றும் எண்மியல் (டிஜிட்டல்) சேவைகள் துறை கூடுதல் முதன்மைச் செயலராக குமார் ஜெயந்த் நியமிக்கப் பட்டுள்ளார்.

கலால்துறை கூடுதல் முதன்மைச் செயலராக தீரஜ் குமார் நியமிக்கப்பட்டுள்ளார்.

பிற்படுத்தப்பட்டோர், மிகவும் பிற்படுத்தப்பட்டோர், சிறுபான்மையினர் நலத்துறை கூடுதல் செயலராக எஸ். சுரேஷ் குமார் நியமிக்கப்பட்டுள்ளார்.

நிதித்துறை துணைச் செயலராக சி. ஏ. ரிஷப் நியமிக்கப்பட்டுள்ளார்.

பொதுத்துறை துணைச் செயலராக பி. விஷ்ணு சந்திரன் நியமிக்கப்பட்டுள்ளார்.

சமூக நலத்துறை, மகளிர் மேம்பாட்டுத்துறை இணைச் செயலராக எஸ். வளர்மதி நியமிக்கப்பட்டுள்ளார். அவர் கூடுதலாக தமிழநாடு அரசின் பணிபுரியும் பெண்களுக்கான விடுதி நிர்வாகத்தின் மேலாண் இயக்குநராகவும் பொறுப்புவகிப்பார் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

கலால்துறை இணைச் செயலராக ஜெ. ஆனி மேரி சுவர்ணா நியமிக்கப்பட்டுள்ளார். வீட்டுவசதி, நகர்ப்புற மேம்பாட்டுத் துறை இணைச் செயலராக ஷ்ரவன் குமார் ஜதாவத் நியமிக்கப்பட்டுள்ளார்.

ராமநாதபுரம் ஆட்சியர் பி.விஷ்ணு சந்திரன், ராணிப்பேட்டை ஆட்சியர் எஸ். வளர்மதி, அரியலூர் ஆட்சியர் ஜெ. ஆனி மேரி சுவர்ணா, கள்ளக்குறிச்சி ஆட்சியர் ஷ்ரவன் குமார் ஜதாவத் ஆகியோரும் பணியிட மாற்றம் செய்யப்பட்டுள்ளனர்.

இவ்வாறு அரசின் செய்திக் குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.



தருமபுரி மாவட்டம், பாலக்கோடு வட்டம், ஜெர்த்தலாவ் கிராமம்,பாரதியார் நகர் அருகில் நேற்று முன்தினம் எதிர்பாராதவிதமாக இரண்டு தனியார் பேருந்துகள் நேருக்கு நேர் மோதிக்கொண்ட விபத்தில் பலத்த காயமடைந்து தர்மபுரி அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனையில் சிகிச்சை பெற்று வரும் 22 நபர்களுக்கு முதலமைச்சர் – கழகத்தலைவர் அவர்கள் அறிவித்தபடி முதலமைச்சர் பொது நிவாரண நிதியிலிருந்து தலா ரூபாய் 1 இலட்சம் வீதம் 22 பேருக்கும் ரூ.22 இலட்சத்திற்கான காசோலையினை தருமபுரி மாவட்ட மருத்துவக் கல்லூரி மற்றும் மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டுள்ளவர்களுக்கு மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி. கி.சாந்தி, தருமபுரி நாடாளுமன்ற உறுப்பினர் வழக்கறிஞர் ஆ.மணி ஆகியோர் நேரில் சென்று காசோலையினை வழங்கினர். உடன் தருமபுரி சட்டமன்ற உறுப்பினர் எஸ்.பி.வெங்கடேஸ்வரன்,முன்னாள் சட்டமன்ற உறுப்பினர் கிழக்கு மாவட்டச் செயலாளர் தடங்கம் பெ.சுப்பிரமணி,முன்னாள் அமைச்சர் மேற்கு மாவட்டச் செயலாளர் முனைவர் பி.பழனியப்பன், நகர்மன்ற தலைவர் திருமதி.லட்சுமி நாட்டான் மாது அரசு தருமபுரி மருத்துவக்கல்லூரி மருத்துவமனை முதல்வர் மரு.அமுதவல்லி, வருவாய் கோட்டாட்சியர் திருமதி.காயத்ரி, உள்ளிருப்பு மருத்துவ அலுவலர் மரு.நாகேந்திரன், கண்காணிப்பாளர் மரு.சிவகுமார் தர்மபுரி வட்டாட்சியர் சண்முக சுந்தரம், அரசு அலுவலர்கள் மற்றும் உள்ளாட்சி அமைப்புகளின் பிரதிநிதிகள் கலந்து கொண்டனர்.



நகராட்சி நிருவாகத்துறை அமைச்சர் கே.என்.நேரு 15.07.2024 அன்று உப்பிலியாபுரம் ஒன்றியம், தளுகை ஊராட்சியில் ரூ.6.45 கோடி மதிப்பில் கட்டப்படவுள்ள பெரியார் நினைவு சமத்துவபுரத்திற்கு அடிக்கல் நாட்டினார். இந்நிகழ்வில், மாவட்ட ஆட்சித்தலைவர் மா.பிரதீப் குமார், மத்திய மாவட்டச் செயலாளர் வைரமணி, துறையூர் சட்டமன்ற உறுப்பினர் ஸ்டாலின் குமார், முசிறி சட்டமன்ற உறுப்பினர் ந.தியாகராஜன், மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை திட்ட இயக்குநர் தேவநாதன், மாவட்ட ஊராட்சித் தலைவர் த.இராஜேந்திரன், உள்ளாட்சி அமைப்புகளின் பிரதிநிதிகள் மற்றும் அரசு அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

### கோபாலபுரம் குத்துச்சண்டை பயிற்சிமையம் மற்றும்

# சேப்பாக்கம் - திருவல்லிக்கேணி தொகுதியில் சிறு விளையாட்டரங்க கட்டடப் பணிகள்!

### அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் பார்வையிட்டு ஆய்வு !

சென்னை, ஜூலை 18-

சென்னையில் உலகத் தரம் வாய்ந்த மைதானங்கள் மற்றும் உட்கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்துவதன் மூலம் சென்னையை உலக அளவிலான விளையாட்டு நகரமாக நிறுவி, உலகளாவிய போட்டிகளுக்கு சிறந்த இடமாகவும் விளையாட்டு வீரர்களுக்கு உயர் செயல்திறன் பயிற்சி மையமாகவும் உருவாக்க திட்டமிடப்பட்டது. அவ்வகையில் அமைவது தான் கோபாலபுரத்தில் ரூ. 7.79 கோடி மதிப்பீட்டில் கட்டப்பட்டு வரும் குத்துச்சண்டை பயிற்சிமையம். இப்பயிற்சி மையத்தின் கட்டட பணிகளை இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத்துறை அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் நேற்று முன்தினம் (16.07.2024) பார்வையிட்டு ஆய்வு செய்தார்.

தமிழ்நாட்டில் இருக்கும் 234 சட்டமன்றத் தொகுதிகளில், அரசு ஏற்கனவே 61 தொகுதிகளில் பல்வகையான விளையாட்டரங்கங்களை அமைத்துள்ளது. அவ்விளையாட்டரங்கில் தடகளம், கால் பந்து, கூடைப்பந்து, கையுந்து பந்து, கபாடி மற்றும் அந்தந்த பகுதிகளில் உள்ள பிரபலமான விளையாட்டுகள் உட்பட குறைந்தபட்சம் ஐந்து முக்கிய விளையாட்டுகளுக்கான மைதான வசதிகளுடன் அமைக்கப்பட்டுள்ளது. அனைத்து சட்டமன்றப் தொகுதிகளில் விளையாட்டு கட்டமைப்பை மேம்படுத்தும் நோக்கத்துடன் மீதமுள்ள சட்டமன்றத் தொகுதிகளில் சிறு விளையாட்டரங்கம் ரூ.3.00 கோடி மதிப்பீட்டில் அமைத்திட நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

அதன் அடிப்படையில் சேப்பாக்கம் – திருவல்லிக்கேணி சட்டமன்ற தொகுதியில் கட்டப்பட்டு வரும் சிறு விளையாட்டரங்க கட்டட பணிகளை இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் பார்வையிட்டு ஆய்வு செய்தார்.

இவ்வாய்வின்போது தமிழ்நாடு இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத்துறை அரசு கூடுதல் தலைமைச் செயலர் முனைவர். அதுல்ய மிஸ்ரா, ஆயிரம் விளக்கு சட்டமன்ற உறுப்பினர் டாக்டர். நா. எழிலன், தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணைய உறுப்பினர் செயலர் ஜெ. மேகநாத ரெட்டி மற்றும் அரசு உயர் அலுவலர்கள் உடனிருந்தனர்.

### செஞ்சி ஒன்றியம் ஆலம்பூண்டியில்

# மக்களுடன் முதல்வர் திட்டம்!

### அமைச்சர் செஞ்சி மஸ்தான் தொடங்கி வைத்தார்!

செஞ்சி, ஜூலை 18-. தமிழ்நாடு அரசின் சேவைகள் பொதுமக்களை விரைவாகவும், எளிதாகவும் சென்று சேர்ந்திடும் வகையில் செயல்படுத்தப்பட்டுள்ள ‘மக்களுடன் முதல்வர்” திட்ட முகாம் ஊரகப் பகுதிகளிலும் கடந்த 11ஆம் தேதிதர்மபுரியில் முதலமைச்சர் தொடங்கி வைத்துள்ளார்.

இதையடுத்து விழுப்புரம் மாவட்டம் செஞ்சி ஒன்றியம் ஆலம்பூண்டி ஊராட்சியில் மக்களுடன் முதல்வர் திட்டம் தொடங்கப்பட்டது.நிகழ்ச்சிக்கு விழுப்புரம் மாவட்ட ஆட்சியர் டாக்டர் பழனி தலைமை தாங்கினார்.ஆரணி பாராளுமன்ற உறுப்பினர் தரணி வேந்தன்,கூடுதல் ஆட்சியர் வளர்ச்சி ஸ்ருதன் ஜெய் நாராயணன்,செஞ்சி ஒன்றிய பெருந் தலைவர் விஜயகுமார் ஆகியோர் முன்னிலை வகித்தனர். சமூக பாதுகாப்பு திட்டத்தின் துணை ஆட்சியர் முகுந்தன் அனைவரையும் வரவேற்றார்.

நிகழ்ச்சியில் சிறு பான்மையினர் நலன் மற்றும் வெளிநாடு தமிழர்கள் நலத் துறை அமைச்சர் செஞ்சி மஸ்தான் கலந்து கொண்டு மக்களுடன் முதல்வர் திட்டத்தினை தொடங்கி வைத்து பொதுமக்களிடமிருந்து வரப்பெற்ற கோரிக்கை மனுக்களைப் பெற்று கணினி மூலம் பதிவு செய்வதற்கு அவர் அறிவுறுத்தினார்.

அப்போது நிகழ்ச்சியில் பேசிய அமைச்சர் செஞ்சி மஸ்தான்,

பொதுமக்களுக்கு வேண்டிய அனைத்து சேவைகள் மற்றும் கோரிக்கைகள் விரைவாக நிறைவேற்றிட வேண்டும் என்ற வகையில் மக்களுடன் முதல்வர் திட்டத்தை தமிழக முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் கடந்த டிசம்பர் மாதம் துவங்கி வைத்தார்.

இத்திட்டத்தினை தமிழ்நாடு முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்கள் தருமபுரியில் தொடங்கி வைத்தார்.

இந்த முகாம்களில் சம்பந்தப்பட்ட துறை அலுவலர்கள் அனைவரும் ஒரே குடையின்கீழ் மக்களின் கோரிக்கைகளைப் பெற்று பதிவு செய்து முகாம்களில் பெறப்படும் மனுக்கள் அனைத்தும், சம்பந்தப்பட்ட துறைகளால் 30 தினங்களுக்குள் உரிய முறையில் பரிசீலனை செய்யப்பட்டு, தகுதியின் அடிப்படையில் உரிய சேவைகள் மக்களுக்கு வழங்கப்பட வேண்டும் என அமைச்சர் செஞ்சி மஸ்தான் அறிவுறுத்தினார்.

முகாமில் வேளாண்மை இணை இயக்குனர் சீனிவாசன், வேளாண்மை உதவி இயக்குனர் விஜய சந்தர், ஊராட்சி ஒன்றிய துணைத் தலைவர் ஜெயபாலன், ஒன்றிய செயலாளர்கள் மேல்மலையனூர் கிழக்கு நெடுஞ்செழியன், செஞ்சி மதியம் விஜயராகவன், மேற்கு பச்சையப்பன், மாவட்ட விவசாய அணி தலைவர் அஞ்சாஞ்சேரிகணேசன் பொதுக்குழு உறுப்பினர் மணிவண்ணன், வட்டார வளர்ச்சி அலுவலர்கள் சீதாலட்சுமி, மலர்.ஒன்றிய கவுன்சிலர்கள் கேமல், டிலைட், புவனா செந்தில் குமார், கமலம்மாள், ஊராட்சி மன்ற தலைவர்கள் முத்தம்மாள் சேகர் ராஜேந்திரன்,உள்ளிட்டோர் கலந்து கொண்டனர்.செஞ்சி வட்டாட்சியர் ஏழுமலை நன்றி கூறினார்.



தருமபுரி மேற்கு மாவட்டம் பாப்பிரெட்டிப்பட்டிமேற்கு ஒன்றியத்திற்குட்பட்ட பி.பள்ளிப்பட்டி,பொம்மிடி,போதக்காடு,மெணசி,பூதநத்தம்,ஆலாபுரம்,கவுண்டம்பட்டி ஆகிய ஊராட்சிகளில் ஒன்றியக் கழகச் செயலாளர் பி.எஸ்.சரவணன் ஏற்பாட்டில் மேற்கு மாவட்டக் கழகச் செயலாளர் முனைவர் பி.பழனியப்பன் தலைமையில் இந்தியா கூட்டணி சார்பில் வெற்றி பெற்ற தருமபுரி நாடாளுமன்ற உறுப்பினர் வழக்கறிஞர் ஆ.மணி வாக்காளர்களுக்கு நன்றி தெரிவித்தார். இந்நிகழ்ச்சியில் மாவட்ட வர்த்தகரணி அமைப்பாளர் தாமோதரன், பி.பள்ளிப்பட்டி ஊராட்சி மன்றத் தலைவர் திருமலாதினேஷ் மற்றும் மாவட்ட ஒன்றிய நிர்வாகிகள்,அணிகளின் அமைப்பாளர்கள், துணை அமைப்பாளர்கள், கூட்டணி கட்சியினர் கலந்து கொண்டனர்.


**பெருநகர சென்னை மாநகராட்சி**
**இயந்திர பொறியியல் துறை**

இ.பொ.து.ம.வா.ப.ந.க.எண்.சி1/177/2024 **மின்னணு ஒப்பம்**

கீழ்கண்ட பணிக்கு மேற்பார்வை பொறியாளர் (இயந்திரம்) அவர்களால் மின்னணு ஒப்பம் கோரப்படுகிறது. (ஒப்ப விதிகளின்படி)

| கோப்பு எண் | பணியின் விவரம் | முன் வைப்பு தொகை |
| --- | --- | --- |
| சி1/177/2024 | மண்டலம் - 08 புளியந்தோப்பு குப்பை மாற்று வளாகத்திலிருந்து கொடுங்கையூர் குப்பை கொட்டும் வளாகத்திற்கு 153300 மெட்ரிக் டன் அல்லது 365 நாட்களில் (எது பின் நேர்ந்தாலும்) குப்பைகளை அகற்றி கொண்டு செல்லும் பணி | ரூ.4,76,000/- |

ஒப்ப படிவம் சமர்ப்பிக்க கடைசி நாள் மற்றும் நேரம் : 08.08.2024 மதியம் 3.00 மணி
ஒப்ப திறப்பு நாள் மற்றும் நேரம் : 09.08.2024 மதியம் 3.30 மணி
மேலும் விபரங்களுக்கு : http://tntenders.gov.in

செ.ம.தொ.இ / 2348 / ஒப்பந்தப்புள்ளி / 2024 **மேற்பார்வை பொறியாளர் (இயந்திரம்)**

**பெருநகர சென்னை மாநகராட்சி**
**இயந்திர பொறியியல் துறை**

இ.பொ.து.ம.வா.ப.ந.க.எண்.சி1/178/2024 **மின்னணு ஒப்பம்**

கீழ்கண்ட பணிக்கு மேற்பார்வை பொறியாளர் (இயந்திரம்) அவர்களால் மின்னணு ஒப்பம் கோரப்படுகிறது. (ஒப்ப விதிகளின்படி)

| கோப்பு எண் | பணியின் விவரம் | முன் வைப்பு தொகை |
| --- | --- | --- |
| சி1/178/2024 | மண்டலம் - 06 புளியந்தோப்பு குப்பை மாற்று வளாகத்திலிருந்து கொடுங்கையூர் குப்பை கொட்டும் வளாகத்திற்கு 124100 மெட்ரிக் டன் அல்லது 365 நாட்களில் (எது பின் நேர்ந்தாலும்) குப்பைகளை அகற்றி கொண்டு செல்லும் பணி | ரூ.3,85,000/- |

ஒப்ப படிவம் சமர்ப்பிக்க கடைசி நாள் மற்றும் நேரம் : 08.08.2024 மதியம் 3.00 மணி
ஒப்ப திறப்பு நாள் மற்றும் நேரம் : 09.08.2024 மதியம் 3.30 மணி
மேலும் விபரங்களுக்கு : http://tntenders.gov.in

செ.ம.தொ.இ / 2347 / ஒப்பந்தப்புள்ளி / 2024 **மேற்பார்வை பொறியாளர் (இயந்திரம்)**